මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல : 011-2868426

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

web : www.elections.gov.lk e-mail : info@elections.gov.lk

මගේ අංකය :	ඔබේ අංකය :	දිනය :
எனது இல: EC/EDR/2020/4	உமது இல:	திகதி: 2020.03.08

அறிவுறுத்தல் கடித இல - 04

அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கும்,
தலைமை நிறைவேற்று அலுவலர்களுக்கும்,

பாராளுமன்றத் தேர்தல் - 2020
தேர்தல் நடைபெறும் திகதிக்கு முன்பு ஒளி/ஒலிபரப்பு செய்யப்பட்ட/ பரப்பீடு செய்யப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட அரசியல்வாதிகள் பங்குபற்றும் நிகழ்ச்சிகளை மீண்டும் ஒளி/ஒலிபரப்புதல்/ வெளியிடுதல்

2020 பாராளுமன்றத் தேர்தல் பிரகடனம் செய்யப்பட்டுள்ளமையால், 2020.03.02 ஆந் திகதியிலில் ஆரம்பித்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு முடியும் வரை தேர்தல் காலப்பகுதி அமுலில் இருக்கும். இக்காலப்பகுதியினுள் ஊடக நிறுவனங்களின் செயற்பாடு சம்பந்தமான வழிகாட்டல், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் 104ஆ(5)(அ),(1) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு வெளியிடப்படும் ஊடக வழிகாட்டுநெறிகள் சம்பந்தமான அதிவிசேட வர்த்தமானிக்கு அமைய வழங்கப்படுகிறது.

02. தற்போது அரசியல்வாதிகள் கலந்துகொண்ட முன்பு ஒளி/ஒலிபரப்பு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் அதாவது அரசியல் நிகழ்ச்சிகள், கேள்வி/பதில் நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு ரசணை நிகழ்ச்சிகள், அபிவிருத்திக் கருமங்கள் அல்லது அவ்வாறான செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், சங்கீதக் கச்சேரிகள், இசைத் தேர்வு நிகழ்ச்சிகள் அல்லது அவ்வாறான தன்மையிலான வேறேதேனும் நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் ஒளி/ஒலிபரப்பு செய்யப்படுவதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளது.

03. இவ்வாறான நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் ஒளி/ஒலிபரப்பு செய்யப்படுகின்றதன் மூலம் போட்டியிடும் ஏதேனும் அரசியல் கட்சி, சுயேச்சைக் குழுவுக்கு மட்டுமன்றி, சில வேட்பாளர்களுக்கும் ஏனைய வேட்பாளர்களுக்கு ஒப்பீடாக, விசேட ஊக்குவிப்பொன்று இடம்பெறுவதாக அவதானிக்கப்படுகிறது. தேர்தலொன்றின்போது சம களத்தில் போட்டியிடுவதற்கு வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பளிக்கும் சந்தர்ப்பம் இவ்வாறான நிகழ்ச்சிகளை ஒளி/ஒலிபரப்பு செய்வதன் ஊடாக சவாலுக்கு உள்ளாகின்றமையால், தேர்தல் காலப்பகுதி முடிவடையும் வரை முன்பு ஒளி/ஒலிபரப்பு செய்யப்பட்ட, பரப்பீடுசெய்யப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட அரசியல்வாதிகள் பங்குபற்றும் நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் ஒளி/ஒலிபரப்புச் செய்யாமல் இருக்குமாறு அறியத் தருகின்றேன்.

04. சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதற்கு தங்கள் நிறுவனத்தின் பணியாட்டொகுதியிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பைப் பெரிதும் போற்றுகின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர்/தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)